# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2145/53 - 2019 ඔක්තෝබර් මස 18 වැනි සිකුරාදා - 2019.10.18

***2145/53 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ)வின் கீழான கட்டளை*

***2019 ஆம் ஆண்டின் 207 ஆம் இலக்க கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/8/2012/PC/405.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : பிං/3/9/அத்/20.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2019, செத்தெம்பர் 26.

***அட்டவணை***

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**.- பிரதேச செயலாளர், பிங்கிரிய.

2. **காணியின் விபரம்**.- வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில், கரந்தாபற்று கோறளை சிறு பிரிவில், இல. 1430, ஹமன்னாபஹுவ கிராம அலுவலர் பிரிவில், மொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 2095 பிற்சேர்க்கை இல. 2 தாள் இல. 2 மற்றும் 2015.10.21 ஆந் திகதிய இறுதிக் கிராம வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட கீழ்வரும் பெயரையும் விஸ்தீரணத்தையும் கொண்ட காணித் துண்டு :

01. **துண்டு இல. 34 - மயிலகஹமுலஹேன - விஸ்தீரணம்: 0.1417 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 22B ; கிழக்கு: துண்டு இல. 22A மற்றும் 22 ; தெற்கு: துண்டு இல. 22 மற்றும் 9 ; மேற்கு: துண்டு இல. 9 மற்றும் 22B.

11 - 426


G31277 - 21 (2019/10)    இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.